**நவம்பர் – 13**

# TNPSC துளிகள்

- பிரபல தமிழ் சிறுகதை எழுத்தாளரும் பேச்சாளருமான இந்திரா சௌந்தர்ராஜன் மதுரையில் காலமானார்.
- இரண்டாவது இந்திய இராணுவப் பாரம்பரிய விழாவானது (IMHF) புது டெல்லியில் நடைபெற்றது.
- இந்தியாவின் மத்திய குழந்தைத் தத்தெடுப்பு மூல ஆணையம் (CARA) ஆனது சட்டப் பூர்வமான குழந்தைத் தத்தெடுப்புகளை ஊக்குவிப்பதற்காக நவம்பர் மாதத்தினைத் தேசியக் குழந்தைத் தத்தெடுப்பு விழிப்புணர்வு மாதமாகக் கொண்டாடுகிறது.
- இந்தியா-CARICOM (கரீபிய நாட்டுச் சமூக அமைப்பு) இணை ஆணையத்தின் இரண்டாவது கூட்டம் ஆனது சமீபத்தில் நடைபெற்றது.
- நவரத்னா அந்தஸ்து பெற்ற நிறுவனமான தேசிய அனல் மின் கழக லிமிடெட் (NTPC) ஆனது, 2024 ஆம் ஆண்டு நவம்பர் 08 ஆம் தேதியன்று தனது 50வது உருவாக்கத் தினத்தைக் கொண்டாடியது.
- இந்தியாவின் மிகப்பெரிய மின் உற்பத்தி நிறுவனமான NTPC ஆனது, கார்பன் டை ஆக்சைடினை மெத்தனாலாக மாற்றும் உலகின் முதல் ஆலையை மத்தியப் பிரதேசத்தின் விந்தியாச்சல் பகுதியில் அமைந்துள்ள அதன் உற்பத்தி மையத்தில் திறந்து வைத்துள்ளது.
- உலக வானிலை அமைப்பு (WMO) மற்றும் கோப்பர்நிகஸ் பருவநிலை மாற்றச் சேவை (C3S) அறிக்கை ஆகியவை 2024 ஆம் ஆண்டு ஆனது தொழில்துறைக்கு முந்தைய கால கட்டத்திலிருந்து பதிவான மிக வெப்பமான ஆண்டாக இருக்கும் என்று கணித்துள்ளது.
- 'பிராந்திய மற்றும் சார்பு நிலைப் பிராந்தியங்களில் வழக்கமான ஆயுதக் கட்டுப்பாடு - Conventional arms control at the regional and subregional levels' என்ற பாகிஸ்தானின் தீர்மானத்திற்கு எதிராக இந்தியா வாக்களித்துள்ளது.
  - 179 உறுப்பினர்கள் இதற்கு ஆதரவாக வாக்களித்த நிலையில், இஸ்ரேல் நாடு வாக்களிப்பில் இருந்து விலகியது என்ற நிலையில் இந்தத் தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்த ஒரே நாடு இந்தியாவாகும்.


# தமிழ்நாடு செய்திகள்

## வெப்ப அலையால் ஏற்பட்ட துறை வாரியான பாதிப்பு

- மாநிலத் திட்ட ஆணையமானது (SPC), தொழில் முறை சார்ந்தப் பாதிப்புகள் உட்பட பல்வேறு துறைகளில் ஏற்படும் பாதிப்புகளைக் கண்காணித்து அதற்கான முக்கியப் பரிந்துரைகளை வழங்கியுள்ளது.
- இந்த அறிக்கையானது 'Beating The Heat-Tamil Nadu Heat Mitigation Strategy' என்ற ஒரு தலைப்பில் வெளியிடப்பட்டுள்ளது.
- வெளிப்புறத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள், முறைசாராத தொழிலாளர்கள், இயங் கலை வழி ரீதியில் திரட்டப்படும் தொழிலாளர்கள், இயந்திர/உட்புற வெப்பம் நிறைந்த சூழலில் பணியாற்றும் தொழிலாளர்கள் போன்ற பல பெரும் பாதகமான வேலைச் சூழ்நிலைகளில் உள்ள மக்களின் பிரச்சினையை இந்த அறிக்கை குறிப்பிட்டுக் காட்டி உள்ளது.
- கால்நடை வளர்ப்பு, மீன்வளம், காடுகள் மற்றும் சதுப்புநிலங்கள் ஆகியவற்றில் உள்ள

சவால்களையும் இந்த அறிக்கை குறிப்பிட்டு, அதற்கான முக்கியப் பரிந்துரைகளை வழங்கியுள்ளது.

- சில பரிந்துரைகள்:
  - வெப்ப அழுத்தக் குறியீடுகள், அணியக் கூடிய வகையிலான வெப்ப உணர்விக் கருவிகள் அல்லது வானிலைக் கண்காணிப்பு அமைப்புகள் மூலம் பணியிடத்தில் வெப்பத் தாக்க அளவைக் கண்காணிப்பதற்கான வழிமுறைகளை நிறுவுதல்
  - முதலுதவிக்கான பல்வேறு நெறிமுறைகள், மருத்துவச் சேவையை அணுகுதல் மற்றும் ஆபத்தின் போது தொழிலாளர்களை வெளியேற்றுதல் உள்ளிட்ட வெப்பம் தொடர்பான சம்பவங்களுக்கான அவசரகால எதிர் நடவடிக்கைத் திட்டங்களை உருவாக்குதல்.




# தேசியச் செய்திகள்


## இந்தியாவின் 51வது தலைமை நீதிபதி

- குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, தலைமை நீதிபதி சஞ்சீவ் கண்ணாவிற்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.
- அவர் ஆறு மாதங்கள் இந்தியாவின் தலைமை நீதிபதியாகப் பணியாற்ற உள்ளார்.
- ஏற்கனவே வருமான வரித் துறையின் மூத்த அரசுத் தரப்புச் சட்ட ஆலோசகராகவும் அவர் பணியாற்றியுள்ளார்.
- 2004 ஆம் ஆண்டில், அவர் டெல்லியின் தேசியத் தலைநகர் பிராந்தியத்திற்கான அரசுத் தரப்பு சட்ட ஆலோசகராக (உரிமையியல்) நியமிக்கப்பட்டார்.
- 2005 ஆம் ஆண்டில் டெல்லி உயர்நீதிமன்றத்தின் கூடுதல் நீதிபதியாக நியமிக்கப்பட்ட அவர் 2006 ஆம் ஆண்டில் நிரந்தர நீதிபதியானார்.
- 2019 ஆம் ஆண்டு ஜனவரி 18 ஆம் தேதியன்று, நீதிபதி கண்ணா அவர்கள், முன்னதாக

உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாகப் பணியாற்றாத நிலைமையிலேயே உச்ச நீதிமன்றத்தின் நீதிபதியாக நியமிக்கப்பட்டார்.



## WOAH குறிப்பிட்ட ஆய்வுகளை மேற்கொள்வதற்கான ஆய்வகம்




- அரியானாவின் ஹிசார் என்னுமிடத்தில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி சபையின் தேசிய குதிரையினங்கள் தொடர்பான ஆராய்ச்சி மையம் (ICAR-NRC குதிரை) ஆனது, குதிரையின உண்ணிக் காய்ச்சல் (பைரோபிளாஸ்மோசிஸ்) என்ற நோய்க்கான உலக விலங்கு நல (WOAH) ஒரு பிரத்தியேக (குறிப்பிட்ட ஆய்வுகளை மேற்கொள்வதற்கான) ஆய்வகமாக நியமிக்கப்பட்டுள்ளது.
- 20வது கால்நடை கணக்கெடுப்பின்படி, இந்தியாவில் சுமார் 0.55 மில்லியன் குதிரை இனங்கள் (குதிரைகள், மட்டக் குதிரை, கழுதைகள், கோவேறுக் கழுதைகள்) உள்ளன.
- குதிரையின உண்ணிக்காய்ச்சல் ஆனது, உண்ணிகள் மூலம் பரவக்கூடிய பாபேசியா கபாலி மற்றும் தைலேரியா ஈக்வி போன்ற புரோட்டோசோவா ஒட்டுண்ணிகளால் ஏற்படுகிறது.
- அவை குதிரைகள், கழுதைகள், கோவேறுக் கழுதைகள், மற்றும் வரிக்குதிரைகளை பாதிக்கின்றன.

## காரீஃப் பருவப் பயிர்க்கான முதலாவது முன்கூட்டிய மதிப்பீடுகள்

- 2024-25 ஆம் ஆண்டின் காரீஃப் பயிர் பருவத்தில் இந்தியாவின் அரிசி உற்பத்தி ஆனது சாதனை அளவான 119.93 மில்லியன் டன்னை (MT) எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- அரிசி உற்பத்தியானது, முந்தைய ஆண்டு காரீஃப் பருவத்தை விட 6.67 மில்லியன் டன் அதிகமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

- பருமணி தானியங்களில், 2024-25 ஆம் ஆண்டு காரீஃப் பருவத்தில் (ஜூலை-ஜூன்) மக்காச்சோள உற்பத்தியானது இதுவரை இல்லாத அளவிற்கு 24.54 மெட்ரிக் டன்னாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ள நிலையில் இது கடந்த ஆண்டு 22.24 மெட்ரிக் டன்னாக இருந்தது.
- சோள உற்பத்தியானது, 2.19 மெட்ரிக் டன் என மதிப்பிடப்பட்டுள்ள நிலைமையில் கம்பு உற்பத்தி 9.37 மெட்ரிக் டன்னாக குறையும்.
- முந்தைய ஆண்டில் சுமார் 56.93 மில்லியன் டன் அளவாக இருந்த மொத்தப் பருமணி தானியங்களின் உற்பத்தியானது இந்த ஆண்டில் 37.81 மெட்ரிக் டன்னாகக் குறைந்து உள்ளது.
- 2024-25 ஆம் ஆண்டின் காரீஃப் பயிர் பருவத்தில் மொத்த உணவு தானிய உற்பத்தி சுமார் 164.70 மெட்ரிக் டன் ஆக இருக்கும் என வேளாண் அமைச்சகம் மதிப்பிட்டுள்ளது.
- இது கடந்த ஆண்டு பதிவான 155.76 மெட்ரிக் டன்னை விட அதிகமாகும்.

**ESTIMATED PRODUCTION (in million tonne)**

| | 2023-24 | 2024-25 | Increase |
|---|---|---|---|
| Rice | 113.26 | 119.93 | 5.89% |
| Maize | 22.24 | 24.54 | 10.34% |
| Pulses | 6.97 | 6.95 | -0.29% |
| Total foodgrains | 155.77 | 164.7 | 5.73% |
| Total oilseeds | 24.16 | 25.74 | 6.54% |
| Sugarcane | 453.16 | 439.3 | -3.06% |
| Cotton | 32.52 | 29.92 | -8% |

# சர்வதேசச் செய்திகள்

## Peace with Nature




- ஐக்கிய நாடுகள் சபையின் 16 வது பங்குதாரர்கள் உச்சி மாநாட்டில் (COP16) பல்லுயிர்ப் பெருக்கம் தொடர்பான பேச்சுவார்த்தையில் கொலம்பியா நாடு "இயற்கையுடனான சமாதானம்- Peace with Nature" மேற்கொள்வதற்காக 20 நாடுகளுடன் ஒரு கூட்டணியைத் தொடங்கியுள்ளது.

- இந்தக் கூட்டமைப்பில் மெக்சிகோ, சுவீடன், உகாண்டா மற்றும் சிலி உள்ளிட்ட நான்கு நாடுகள் அடங்கும் என்ற நிலையில் இருப்பினும் ஆசியா-பசிபிக் பிராந்திய நாடுகள் எதுவும் இதில் இடம் பெறவில்லை.
- சுற்றுச்சூழலுடன் மிக இணக்கமாக வாழ்வதற்கு இயற்கையுடனான மனித குலத்தின் உறவை மாற்றுவதை நோக்கமாகக் கொண்ட கொள்கைகளின் தொகுப்பை ஏற்றுக் கொள்ளும் நாடுகளுக்கு இந்தக் கூட்டணியில் இணைய அனுமதிக்கப்பட்டுள்ளது.

## பிரேசிலின் அமேசானில் காடழிப்பு




- பிரேசிலின் அமேசான் பகுதியின் வன இழப்பு ஆனது, முந்தைய ஆண்டை விட 30.6% குறைந்துள்ளது.
- 12 மாத கால இடைவெளியில், அமேசான் மழைக் காடுகள் 6,288 சதுர கிலோமீட்டர் (2,428 சதுர மைல்) பரப்பினை இழந்துள்ளது.
- செராடோ என்று அழைக்கப்படும் பிரேசிலின் பரந்து விரிந்த சவன்னா புல்வெளி பரப்பில் காடழிப்பு ஆனது 25.7% குறைந்துள்ளது என்ற நிலையில் இது கடந்த ஐந்து ஆண்டுகளில் பதிவான முதல் சரிவு ஆகும்.
- அழிக்கப் பட்ட பகுதியின் அளவானது, 8,174 சதுர கிலோமீட்டர் (3,156 சதுர மைல்) என்ற அளவினை எட்டியுள்ளது.
- இந்தியாவை விட இரண்டு மடங்கு பெரிய பரப்பளவிலான அமேசான் பகுதி, உலகின் மிகப்பெரிய மழைக்காடுகளைக் கொண்டுள்ளது என்ற நிலையில் அதில் மூன்றில் இரண்டு பங்கு பிரேசிலில் அமைந்துள்ளது.
- அமேசான் நதிப் படுகையானது உலகின் 20% நன்னீர் மற்றும் 16,000 அறியப்பட்ட மர இனங்கள் உள்ளிட்ட பல்லுயிர்ப் பெருக்கத்தினைக் கொண்டுள்ளது.

## குழந்தைகளுக்கு எதிரான வன்முறையை முடிவிற்கு கொண்டு வருவது தொடர்பான உலகளாவிய அமைச்சர்கள் மாநாடு

- குழந்தைகளுக்கு எதிரான வன்முறையை முடிவிற்குக் கொண்டு வருவது தொடர்பான முதல் உலகளாவிய ரீதியிலான அமைச்சர்கள் மாநாடு ஆனது கொலம்பியா நாட்டின் பொகோட்டாவில் நடைபெற்றது.

- இது UNICEF, WHO மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்முறையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான பொதுச்செயலகத்தின் ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்புப் பிரதிநிதி அமைப்பு ஆகியவற்றுடன் இணைந்து கொலம்பியா மற்றும் சுவீடன் ஆகிய நாடுகளினால் நடத்தப்பட்டது.
- குழந்தைகளுக்கு எதிரான வன்முறையில் அனைத்து வகையான உடல் மற்றும் / அல்லது உணர்ச்சி ரீதியான தவறான நடத்தை மற்றும் பாலியல் அத்துமீறல்கள் ஆகிய அனைத்தும் அடங்கும்.
- ஒவ்வோர் ஆண்டும் சுமார் 1 பில்லியன் குழந்தைகள் உடல், உணர்ச்சி மற்றும் பாலியல் அத்துமீறல்களை எதிர் கொள்கின்றனர்.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்


## ஆதித்யா -L1 கலத்தின் VELC கருவி




- ஆதித்யா-L1 கலத்தின் மூலம் கொண்டு செல்லப்பட்ட VELC கருவி மூலம் பெறப்பட்ட தனிப்பட்ட தரவைப் பயன்படுத்தி, சூரிய வெப்ப உமிழ்வு (CME) நிகழ்வின் தொடக்க நேரத்தைத் துல்லியமாக மதிப்பிட முடியும்.
- இந்தியாவின் சூரிய ஆய்வுக் கலத்தின் முதல் அறிவியல் பூர்வ முடிவை இது மிக நன்கு குறிக்கிறது.
- சூரியனின் புலப்படும் பகுதியின் வெப்ப உமிழ்வுக் கரோனா அடுக்கு ஆய்வுக் கருவி (VELC) ஆனது சூரியனின் மேற்பரப்புக்கு அருகில் உள்ள சூரிய வெப்ப உமிழ்வு (CME)

நிகழ்வினை நெருக்கமாகக் கண்காணிக்க உதவுகிறது.

## நினைவகத் தரவு செயலாக்கத் தொழில்நுட்பம்





- இஸ்ரேலிய நாட்டின் ஆராய்ச்சியாளர்கள் கணினிகள் நேரடியாக நினைவகத்திலேயே தரவைச் செயலாக்க வழி வகை செய்கின்ற ஒரு மென்பொருளை உருவாக்கியுள்ளனர்.
- இந்தக் கண்டுபிடிப்பானது நினைவகம் மற்றும் CPU ஆகியவற்றிற்கு இடையில் தரவுப் பரிமாற்றத்துடன் தொடர்புடைய செயல்திறம் சார்ந்த குறைபாடுகளைத் தீர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது "செயலாக்கிகளின் செயல்திறனில் உள்ள இடைவெளி-memory wall" என்ற ஒரு பிரச்சனையை நிவர்த்தி செய்வதில் ஒரு முக்கியமானப் படிநிலையைக் குறிக்கிறது.
- செயலாக்கியின் வேகம் மற்றும் நினைவக திறன் ஆனது தரவுப் பரிமாற்ற வீதங்களை விட வேகமாக அதிகரிக்கும் போது இந்தப் பிரச்சனை எழுகிறது.
- நினைவகத்தின் உள்ளேயேயான தரவுச் செயலாக்கத் தொழில்நுட்பம் ஆனது, சில கணக்கீடுகளை நேரடியாக நினைவகத்திற்குள்ளேயே நிகழ அனுமதிக்கிறது.
- ஆராய்ச்சியாளர்கள் PyPIM என்ற தளத்தை உருவாக்கினர்.
- இந்த இயங்குதளமானது பைதான் நிரலாக்க மொழியை எண்ணிமச் செயலாக்க - நினைவகச் செயலாக்க (PIM) தொழில்நுட்பத்துடன் ஒருங்கிணைக்கிறது.
- PyPIM என்பது நினைவகத்திற்குள் நேரடியாகச் செயல்பாடுகளை மேற்கொள்ள உதவுகின்ற புதிய வழிமுறைகளை வழங்குகிறது.

## ஆர்.என்.ஏ திருத்தம் - வேவ் லைஃப் சயின்சஸ்

- உயிரித் தொழில்நுட்ப நிறுவனமான வேவ் லைஃப் சயின்சஸ், மருத்துவத் துறையில் ஆர்.என்.ஏ திருத்தம் மூலம் மரபணு சார்ந்த குறைபாட்டு நிலைக்குச் சிகிச்சையளித்த முதல் நிறுவனம் ஆகும்.
- RNA குறுக்கீடு எனப்படும் செயல்பாட்டில் RNAவின் பங்கு CRISPR-Cas9 மரபணு-திருத்த நுட்பத்தின் வெற்றிக்கு இன்றியமையாததாக உள்ளது.
- செல்கள் டிஎன்ஏவில் உள்ள வழிமுறைகளைப் பயன்படுத்தி தூது ஆர்என்ஏவை (mRNA) ஒருங்கிணைக்கிறது என்ற நிலையில் பின்னர் mRNAவில் உள்ள சில வழிமுறைகளைப்

பயன்படுத்திச் செயல்பாட்டுப் புரதங்களை உருவாக்குகிறது.

- ஆர்.என்.ஏ திருத்தம் ஆனது, செல் ஒருங்கிணைப்பிற்குப் பிறகு, ஆனால் புரதங்களை உருவாக்குவதற்காகச் செல்கள் அதனை அணுகுவதற்கும் முன்னதாகவே mRNAவில் உள்ள பிழைகளை சரி செய்ய அறிவியலாளர்களுக்கு உதவுகிறது.
- வேவ் லைஃப் சயின்சஸ் நிறுவனமானது ஆர்.என்.ஏ திருத்தம் மூலம் α-1 ஆன்டிட்ரிப்சின் குறைபாடு (AATD) என்ற ஒரு பரம்பரை மரபணு கோளாறுக்குச் சிகிச்சை அளித்தது.
- டி.என்.ஏ திருத்தத்தினை விட ஆர்என்ஏ திருத்தம் ஆனது குறிப்பாக பாதுகாப்பு மற்றும் நெகிழ்வுத் தன்மையில் சில நன்மைகளைக் கொண்டுள்ளது.
- டி.என்.ஏ திருத்தமானது ஒரு நபரின் மரபணுவில் நிரந்தர மாற்றங்களை ஏற்படுத்தச் செய்வதோடு, சில நேரங்களில் இது மீள முடியாத பிழைகளுக்கும் வழிவகுக்கும்.
- ஆனால் ஆர்.என்.ஏ திருத்தம் என்பது சில தற்காலிக மாற்றங்களைச் செய்து, இந்தத் திருத்தங்களின் விளைவுகள் காலப்போக்கில் மறைய வழி வகுக்கிறது.





# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## தூய்மையான எரிசக்தி தொழில்நுட்பங்களுக்கான உலகளாவிய சந்தை

- சர்வதேச எரிசக்தி முகமையின் (IEA) இது போன்ற முதல் ஆய்வு வெளியீடு இதுவாகும்.
- 2023 ஆம் ஆண்டில் 700 பில்லியன் டாலராக இருந்த தூய்மையான எரிசக்தி தொழில் நுட்பங்களுக்கான உலகளாவிய சந்தையானது 2035 ஆம் ஆண்டிற்குள் 2 டிரில்லியன் டாலராக உயரும்.
- இதில் சூரியசக்தி ஒளி மின்னழுத்தம், காற்றாலை விசையாழிகள், மின்சார மகிழுந்து, மின் சேமிப்புக் கலம், மின்னாற் பகுப்பு மற்றும் வெப்ப ஏற்றிகள் ஆகியன அடங்கும்.
- இந்த மதிப்பு ஆனது சமீபத்திய ஆண்டுகளில் உலகின் கச்சா எண்ணெய் சந்தையின் மதிப்பிற்கு நெருக்கமாக உள்ளது.
- இத்துறையில் அதிக முதலீடு செய்த நாடுகள் சீனா, ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா மற்றும் இந்தியா ஆகியனவாகும்.
- தூய்மையான தொழில்நுட்பங்களின் மீதான எதிர்காலத்திற்கான உலகின் ஒரு பெரிய உற்பத்தி சக்தியாக சீனா நிலைத்திருக்கும்.

- அமெரிக்காவில் பருவநிலைக்கு உகந்த பல தொழில்நுட்பங்களின் உற்பத்திக்கான செலவு சீனாவை விட 40% அதிகமாகவும், ஐரோப்பிய ஒன்றியத்தில் 45% அதிகமாகவும், இந்தியாவில் 25% அதிகமாகவும் உள்ளது.




## முக்கிய தினங்கள்

### சர்வதேச அறிவியல் மற்றும் அமைதி வாரம் - நவம்பர் 09 முதல் 15 வரை




- இந்த ஒரு வார அளவிலான அனுசரிப்பானது, அறிவியல் பூர்வ ஒத்துழைப்பு மூலம் அமைதியை ஊக்குவிக்கிறது.
- இது சர்வதேச அமைதி ஆண்டின் ஒரு பகுதியாக 1986 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.


- ஐக்கிய நாடுகள் பொதுச் சபை 1988 ஆம் ஆண்டில் இந்த நாளிற்கு அதிகாரப்பூர்வமாக அங்கீகாரமளித்தது.

## தேசிய சட்ட சேவைகள் தினம் - நவம்பர் 09

- சட்டம் ரீதியான விழிப்புணர்வை ஊக்குவித்தல் மற்றும் அனைத்துக் குடிமக்களுக்கும், குறிப்பாக விளிம்புநிலைச் சமூகங்களைச் சேர்ந்தவர்களுக்கு நீதி கிடைப்பதை உறுதி செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்திய உச்ச நீதிமன்றம் ஆனது 1995 ஆம் ஆண்டில் தேசிய சட்ட சேவைகள் தினத்தை நிறுவியது.
- நாடு முழுவதும் ஒரே மாதிரியான முறையில் சட்ட உதவித் திட்டங்களுக்கு சட்ட ரீதியான அடிப்படையை வழங்குவதற்காக 1987 ஆம் ஆண்டு சட்ட சேவைகள் அதிகார சபை சட்டம் ஆனது இயற்றப்பட்டது.
- இந்தச் சட்டம் ஆனது இறுதியாக 1995 ஆம் ஆண்டு நவம்பர் 09 ஆம் தேதியன்று அமல்படுத்தப்பட்டது.
- தேசிய சட்ட சேவைகள் ஆணையம் (NALSA) ஆனது, 1987 ஆம் ஆண்டு சட்ட சேவைகள் அதிகாரசபை சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டது.




## உலக நோய்த் தடுப்பு தினம் - நவம்பர் 10




- தொற்று நோய்களைப் பெருமளவில் தடுப்பதிலும், பொது சுகாதாரத்தைப் மிகவும் நன்கு பாதுகாப்பதிலும் தடுப்பூசிகளின் மிக முக்கியப் பங்கு பற்றிய விழிப்புணர்வை

ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இது 2012 ஆம் ஆண்டில் உலக சுகாதார அமைப்பினால் (WHO) நிறுவப்பட்டது.
- இந்தியாவில் உலகளாவிய நோய்த்தடுப்பு திட்டம் (UIP) 1978 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது.
- 1992 ஆம் ஆண்டில், UIP ஆனது குழந்தை உயிர்ப் பிழைப்பு மற்றும் பாதுகாப்பானத் தாய்மை திட்டத்தின் ஒரு பகுதியாக மாறியது.
- பின்னர், 1997 ஆம் ஆண்டில், இது தேசிய பேறுகால மற்றும் குழந்தைகள் நலத் திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டது.

# இதரச் செய்திகள்

## 4,000 ஆண்டுகள் பழமையான நகரம்

- வடமேற்கு சவூதி அரேபியாவில் ஒரு அழகிய பாலைவனச் சோலையில் சுமார் 4,000 ஆண்டுகள் பழமையான கோட்டை நகரத்தின் பல்வேறு சிதிலமடைந்தப் பகுதிகள் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களால் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
- பழங்கால மக்கள் நாடோடிகள் என்ற நிலையிலிருந்து நகர்ப்புற வாழ்க்கை முறைக்கு எப்படி மாறினார்கள் என்பதை இது எடுத்துக் காட்டுகிறது.
- அல்-நதாஹ் என்று அழைக்கப்படும் இடம் ஆனது வறண்டப் பாலைவனத்தால் சூழப் பட்ட ஒரு பசுமையான பகுதியாகும்.
- இது 2400-2000 BCE காலத்தில் கட்டமைக்கப்பட்ட சுமார் 2.6 ஹெக்டேர் பரப்பிலான ஒரு நகரம் ஆகும் என்பதோடு இது குறைந்தது 1500 BCE மற்றும் 1300 BCE காலம் வரையில் நீடித்திருக்கலாம்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★